# ஆட்களைக் கடத்தல் பற்றிய அறிக்கை 2008

## இலங்கை (அடுக்கு 2 அவதானிப்புப் பட்டியல்)

சம்பந்தப்பட்டவர்களின் விருப்பமின்றி வேலைக்கமர்த்துவதற்காகவும் பாலியற் சுரண்டலுக்காவும் ஆண்களையும் பெண்களையும் கடத்தும் நாடாக இலங்கையுள்ளது. இங்கிருந்து ஆட்கள் கடத்தப்பட்டு வேறிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது போலவே வேறிடங்களிலிருந்தும் ஆட்கள் கடத்தப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்படுகிறார்கள். கட்டிட வேலையாட்களாகவும் வீட்டு வேலைக்காரர்களாகவும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களாகவும் இலங்கை ஆண்களும் பெண்களும் விருப்பத்துடன் குவைத், ஜோர்டன், சவுதி அரேபியா, கட்டார், லெபனன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், ஹொங்கொங், மலேஸியா, தென் கொரியா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றார்கள். எனினும், நடமாட்டத்தின் மீது தடைகள் விதிக்கப்படும் போதும், கடவுச்சீட்டுக்களை நிறுத்திவைக்கும் போதும், அச்சுறுத்தல்கள், உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை எதிர்நோக்கும்போதும், சில சந்தர்ப்பங்களில் வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர்கள் வெளி நாட்டிற்குச் செல்லும் முன் அறவிடும் கட்டணத்தினால் ஏற்படும் கடன் நிலைமையை எதிர்நோக்கும்போதும் சிலர் விருப்பமின்றி வேலை செய்யும் நிலைமைகளுக்குத் தள்ளப்படுகின்றார்கள். வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல்களுக்காகவும் குறைந்த அளவில் கட்டாய உழைப்பிற்காகவும் பிள்ளைகள் உள் நாட்டில் கடத்தப்படுகிறார்கள். வெளி நாட்டுப் பயங்கரவாத அமையமென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்ட விடுதலைப் புலிகள் (LTTE), இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியிலுள்ள பிரதேசங்களில் போர் வீரர்களாகப் பயன்படுத்துவதற்காகப் பிள்ளைகளைத் தொடர்ந்தும் சேர்த்தனர்; சில சமயங்களில் கட்டாயத்தின்பேரில் இவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அரசாங்கச் சார்பான துணை இராணுவ அமையங்கள் பிள்ளைப் போர் வீரர்களை அமர்த்துவதற்கு அரசாங்கப் பாதுகாப்புப் படைகளும் உதவுகின்றன. இங்கும் சில சமயங்களில் கட்டாயத்தின் பேரில் இவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். தாய்லாந்து, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்தும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற அரசுகளான ஏனைய நாடுகளிலிருந்தும் சிறு தொகையில் பெண்கள், வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டலுக்காக இலங்கைக்குக் கடத்தப்படுகிறார்கள். ஹைட்டியில் இலங்கையைச் சேர்ந்த சமாதானப் பாதுகாக்கும் படைவீரர்கள், பால்ரீதியான, சில சமயங்களில் பராயமடையாதோர் தொடர்பாகவும் துர் நடத்தையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நூறிற்கும் மேற்பட்ட போர்வீரர்கள், 2007 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதத்தில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஆட்கடத்தலை ஒழிப்பதற்கான ஆகக் குறைந்த தரங்களையும் இலங்கை முற்றாகப் பூர்த்தி செய்யவில்லை; எனினும், இதைச் செய்வதற்கு இலங்கை குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொள்கின்றது. கடந்த ஆண்டில், குறிப்பாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையில், ஆட்கடத்தல் தொடர்பான பாரதூரமான விஷயங்களைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் அதிகரித்த முயற்சிகள் சம்பந்தமான ஆதாரங்களை வழங்குவதற்குத் தவறியதால், இலங்கை அடுக்கு. 2 அவதானிப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. ஆட்கடத்தற் குற்றங்களுக்காக, எந்த ஒருவரையும்

கைது செய்யவோ, எவருக்கும் எதிராக வழக்குத் தொடரவோ, குற்றத்தீர்ப்பு அளிக்கவோ அரசாங்கம் தவறியுள்ளது. அத்துடன், தாம் கடத்தப்பட்டதன் விளைவாக செய்த குற்றங்களுக்காக, ஆட்கடத்தலுக்காளான சிலரை, அரசாங்கம் தொடர்ந்தும் தண்டிக்கின்றது. அதே வேளை, வெளி நாடுகளுக்குக் கடத்தப்பட்ட இலங்கை பிரஜைகள் உட்பட, ஆட்கடத்தலுக்காளான சிலரை இலங்கை பாதுகாத்துள்ளது. ஜுலை மாதத்தில் அரசாங்கம் வர்த்தக ரீதியான ஆட்கடத்தல் தொடர்பான ஒரு கவன மையத்தை உருவாக்கியது. ஆட்கடத்தலுக்கெதிரான கொள்கையை விருத்தி செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்குமாக ஒவ்வொரு மாதமும் ஆட்கடத்தலுக் கெதிரான செயற் குழுவை இம்மையம் அழைக்கும்.

## இலங்கைக்கான விதப்புரைகள்:

வழக்குத்தொடர்தல்கள், குற்றத்தீர்ப்பளித்தல், தண்டனைகள் தொடர்பான பதிவுகளைக் குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்துதல்; விபச்சாரத்திற்காகக் கைது செய்யப்பட்ட பெண்கள் போன்ற, வசப்படக்கூடிய குழுக்களிடையே, ஆட்கடத்தலுக் காளானவர்கள் இனங்காண்பதற்கு முறைசார் நடைமுறை ஒன்றை நிறுவுதல்; கடத்தப்பட்டதன் விளைவாகச் செய்யப்படும் செயல்களுக்காக, ஆட்கடத்தலுக் காளானவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள், தண்டிக்கப்பட மாட்டார்கள், நாட்டிலிருந்து அகற்றப்படமாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்துதல்; ஆளானோரை இனங்காண்பதற்கும் பாதுகாப்பதற்குமான சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களுக்கு மேலும் பயிற்சி அளித்தல்.

## வழக்குத் தொடர்தல்

அறிக்கைக்குட்பட்ட இக்காலப்பகுதியில், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பரப்பில் இலங்கை வெகுவாகக் குறைந்த முன்னேற்றத்தையே கண்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் தனது தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தத்தைச் செய்வதன் மூலம், இலங்கை அரசாங்கம், சகல விதமான கடத்தல்களையம் தடை செய்கின்றது. கடத்தற் குற்றங்களுக்கு 20 வருடங்கள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்; இத்தண்டனைகள், ஏனைய பாரதூரமான குற்றங்களுக்கான தண்டனைகளுக்குச் சமமாக இருக்கின்றன. மோசடியான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் ஈடுபட்ட 350 தொழிலுக்கு ஆட்சேர்ப்போருக்கெதிராக அரசாங்கம் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதே வேளை, ஆட் கடத்தல் என்று கூறக்கூடிய செயல்களுக்காக, ஆட்சேர்ப்போருக்கெதிராகக் குற்றவியல் வழக்குத் தொடரவோ தண்டிக்கவோ இல்லை. சவுதி அரேபியாவுக்கு, வீட்டு வேலைக்காரிகளாக ஆட்கடத்தப்படவிருந்த மூன்று பெண்கள் சம்பந்தப்பட்ட ஆட்சேர்க்கும் முகவருக்கெதிராக, அரசாங்கம் ஒரு புலன் விசாரணையை ஆரம்பித்தது. பிள்ளைகளைக் கடத்தல் உட்பட, வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டலுக்கான ஆட் கடத்தலுக்காக எத்தகைய வழக்குத் தொடர்தலையோ குற்றத்தீர்ப்பு வழங்குதலையோ பதிவு செய்வதில் இலங்கை தவறியுள்ளது. பராயமடையாதோர் உட்பட, பாலியல் ரீதியான சுரண்டல் தொடர்பாக, ஹைட்டியில், இலங்கைச் சமாதானப் படையினரின் முறைக்கேடான பாலியல் நடத்தை பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமையத்தின் கூட்டுறவுடன் இலங்கை புலன்விசாரணை ஒன்றை ஆரம்பித்தது.

பிள்ளைப் போர் வீரர்களாகக் கட்டாயத்தின் பேரில் அமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட 47 பிள்ளைக் கடத்தல்களை அரசாங்கம் புலன் விசாரணை செய்ததன் பயனாக, 37 பிள்ளகள் வீடு திரும்பினர். எனினும், இவை தொடர்பாக கைதுகளோ, வழக்குத் தொடர்தல்களோ குற்றத் தீர்ப்புக்களோ செய்யப்படவில்லை. கடத்தல்களுக்கு ஆதரவளித்த அரசாங்க அலுவலர்கள் எவரும் கைது செய்யப்படவுமில்லை; கடத்தலில் ஈடுபட்ட எந்த அலுவலர்களையும் பற்றி உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை எதுவும் தயாரிக்கப்படவுமில்லை.

## பாதுகாப்பு:

ஆட்கடத்தலுக்காளானவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் ஓரளவு மேம்பட்டபோதிலும் வரையறைக்குட்பட்டனவாகவே இருந்தன. பழிவாங்கல்கள் அல்லது கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடிய நாடுகளுக்கு அவர்கள் அழைத்துச்செல்லப்படுவதற்கு எதிராகச் சட்டரீதியான மாற்றுக்களை வெளி நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வழங்கவில்லை. கடத்தப்பட்டதன் விளைவாக, மேற்கொண்ட செயல்களுக்கு அவர்களுக்குத் தண்டனை வழங்காமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் இலங்கை தவறியுள்ளது. பாலியல் சுரண்டலுக்காக இலங்கைக்குக் கடத்தப்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்கள், சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதற்காகத் தண்டப் பணம் செலுத்தும்படி கேட்கப்பட்டார்கள் என்பதும் அதன் பின்னர், பொதுவாக, அவர்கள் நாடுகடத்தப்பட்டார்கள் என்பதும் பற்றி இடம்பெற்றுவரும் அறிக்கைகள், குறிப்பிடுகின்றன. கடத்தலுக் காளாகக்கூடியவர்களை இனங்காண்பதற்கான முறைசார் முறைமை ஒன்று, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களிடையே இல்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள், அரசாங்கச் சார்பற்ற அமையங்களால் வழங்கப்பட்ட பயிற்சியில் பங்குபற்றியபோதிலும், வசப்பட்டோரை இனங்காணுதல் தொடர்பான சிறப்புப் பயிற்சியை அரசாங்கம் வழங்குவதில்லை; வள மட்டுப்பாடுகளின் காரணமாக, பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான, விசேட பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம், முக்கியமாக, அரசாங்கச் சார்பற்ற அமையங்களின் மீது தங்கியுள்ளது. தம்மைக் கடத்தியோருக்கெதிரான புலன் விசாரணைகளில் உதவும்படி பொலீஸார் பாதிக்கப்பட்டவர்களை ஊக்குவிக்கின்றனர். ஆனால், பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்பிற்கு அல்லது சாட்சிகளின் பாதுகாப்பிற்காக விசேஷமான நடவடிக்கைகள் எதையும் அவர்கள் எடுப்பதில்லை. வெளி நாடுகளுக்குக் கடத்தப்பட்டு பாதிக்கப்பட்டோருக்காக, அரசாங்கம், இராஜதந்திரத் தூதரகங்களில் உறைவிடங்களை நடத்துகின்றது; நாடு திரும்புவதற்கான உதவிகளை வழங்குகின்றது; வெளி நாட்டிற்குச் செல்வதற்கு முன்னர், அரசாங்கத்தில் பதிவு செய்துகொண்ட சிலருக்கு நஷ்ட ஈட்டை வழங்குகின்றது. 2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், மத்திய கிழக்கில் வீட்டுப்பணியாளராக வேலை செய்து பின் பிரச்சினைகளுக்குள்ளாகிய 200 இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு இலங்கை அரசாங்கம் உதவியது. எனினும், நாடு திரும்பிய, பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களைப் புலன் விசாரணை செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சி மிகக் குறைவாகும். நாடு திரும்பியோருக்கு, உறையுள், மதியுரை, வைத்தியப் பராமரிப்புத் தொடர்பாக வரையறுக்கப்பட்ட உதவி வழங்கப்படுகின்றது. வன்செயல்களுக்காளான பெண்களுக்கு அரசாங்கம், இரண்டு தற்காலிக உறையுள்களைத் திறந்தது. இவை,

கடத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. பிள்ளைப் போர்வீரர்களின் பிரச்சினைகளை அணுகி ஆராய்வதற்கு அமைச்சிடை குழு ஒன்றை அரசாங்கம் நிறுவியது. போர் வீரர்களாகக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கென விசேஷமாக, இலங்கை, இரண்டு புனர்வாழ்வு மையங்களை அமைத்துள்ளது; இப்புனர்வாழ்வு மையங்கள், 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பின்னர், 52 பிள்ளைகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

## தடுத்தல்

அறிக்கைக்குட்படுத்தப்பட்ட இக்காலப் பகுதியில், ஆட்களைக் கடத்துதலைத் தடுப்பதற்கு மட்டுப்படுத்திய முயற்சிகளை இலங்கை மேற்கொண்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில், வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (BFE) இடம் பெயர்ந்து செல்லும் தொழிலாளர்கள், ஒப்பந்த விதிகளை விளங்கிக்கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, வெளி நாட்டுத் தொழில் ஒப்பந்தங்கள் யாவும், வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தைச் சேர்ந்த ஓர் அலுவலரின் முன் கைச்சாத்திடப்பட வேண்டுமென உத்தரவு விதித்தது. சிறுவர் பாலியல் சுரண்டலைப் பற்றிய 26 விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை, ஆசிரியர்கள், மாணாக்கர்கள், விடுதியக ஆளணியினர், வாடகை வாகனச் சாரதிகள், முச்சக்கர வண்டிச் சாரதிகள், சுற்றுலாத் துறையில் தொழில் புரியும் ஏனையோருக்குமாக அரசாங்கம் நடத்தியது. பிள்ளைகளைத் தொழிலில் அமர்த்துதல், பாலியல் சுரண்டல் வேறும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கு, 2008 ஆம் ஆண்டு ∴பெப்ரவரி மாதம் அரசாங்கம் நேரடித் தொலைபேசித் தொடர்பை நிறுவியது. ஐக்கிய நாடுகளின் TIP மூல ஆவணத்தை இலங்கை முறையேற்புச் செய்யவில்லை.